

புரட்சிப் **பெரியார் முழக்கம்**

திராவிடர் விடுதலைக் கழக வார ஏடு

www.dvkperiyar.com

ஆசிரியர் : விடுதலை இராசேந்திரன் | திருவள்ளுவர் ஆண்டு 2052 | ஆகஸ்டு 26, 2021 | புரட்சி 20 | முழக்கம் 26 | விலை: ரூ.3.00

## பெரியார் – கலைஞரை இழிவுபடுத்துகிறார்கள்: ஆர்.எஸ்.எஸ். மதவாதக் கூடாரமாகி நிற்கும் சேலம்–பெரியார் பல்கலைக்கழகம்

# கழகம் கண்டன ஆர்ப்பாட்டம்

***பெரியார் – கலைஞரை அவமதிக்கும் சேலம்–பெரியார் பல்கலைக்கழக முறைகேடுகளைத் தடுத்து நிறுத்தக் கோரி திராவிடர் விடுதலைக் கழகத் தலைவர் கொளத்தூர் மணி தலைமையில் கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெற்றது.***

ஆர்.எஸ்.எஸ். கூடாரமாக செயல்படும் சேலம்-பெரியார் பல்கலைக்கழக முறைகேடுகளைக் கண்டித்து, கழகத் தலைவர் கொளத்தூர் மணி தலைமையில் திராவிடர் விடுதலைக் கழகம் சார்பில் ஆக. 23, 2021 காலை 10 மணியளவில் கண்டன ஆர்ப்பாட்டம் எழுச்சியுடன் நடந்தது. பல்கலைக் கழக வளாக வாயிலில் நடந்த இந்த ஆர்ப்பாட்டத்தை சேலம் மாவட்ட திராவிடர் விடுதலைக் கழகங்கள் ஏற்பாடு செய்திருந்தன.

ஆர்ப்பாட்டத்தின் இறுதியில் கழகத் தலைவர் கொளத்தூர் மணி, செய்தியாளர்களுக்கு அளித்த பேட்டியில், “பெரியார் பல்கலைக்கழகம், மதவாதிகளிடம் ஜாதியவாதிகளிடம் சிக்கி சீரழிந்து கொண்டிருக்கிறது, முதல்வர் தலையிட்டு நடவடிக்கை எடுக்க வேண்டும்” என்று வலியுறுத்தினார்.

“இந்தப் பல்கலைக்கழகத்தில் கலைஞர் பெயரில் ஆய்வு மய்யம் ஒன்று இருக்கிறது. இதில் எந்த நிகழ்வுகளும் நீண்டகாலமாக நடைபெறுவது இல்லை. கடந்த ஆக.16ஆம் தேதி கலைஞர் கொள்கைக்கு நேர்மாறாக, ‘வேத சக்தியும் வர்மக் கலையும்’, ‘பண்பாட்டுப் பின்புலமும்’ என்ற ஆய்வரங்கம் நடத்துவதாக அறிவிக்கப்பட்டது. திராவிட இயக்கத் தமிழர் பேரவை உள்ளிட்ட அமைப்புகளின் கடும் எதிர்ப்புகளுக்குப் பிறகு நிறுத்தப்பட்டது.

பல்கலைக்கழக வளாகத்திலுள்ள பெரியார் சிலையை மக்கள் பார்வையிலிருந்து மறைக்கும் நோக்கத்தோடு தோரணவாயில் ஒன்றை கட்ட திட்டமிட்டார்கள். அப்போது சுயமரியாதைக்காரரான தி.மு.க. மாவட்டச் செயலாளர் வீரபாண்டி ஆறுமுகம், கடும் எதிர்ப்பு தெரிவித்து, அந்த வாயில் கட்டுவதைத் தடுத்து நிறுத்தினார். இப்போது தோரண வாயிலைக் கட்டி பெரியார் சிலையை மறைத்து விட்டார்கள். பெரியார் படத்துக்கு பதிலாக சரசுவதி படத்தை ஏற்கனவே இருந்த துணைவேந்தர் மாட்டினார். இப்போது பகவத் கீதையையும் அதற்கு அருகே இடம் பெறச் செய்து விட்டார்கள். அறிவியலைப் பரப்ப வேண்டிய ஒரு பல்கலைக் கழகம் மதவாதத்தை பரப்பிக் கொண்டிருக்கிறது.

பல்கலைக்கழக நியமனங்களில் இடஒதுக்கீடுகள் பின்பற்றப்படுவதே இல்லை. நியமனங்களுக்கான அறிவிப்புகளிலும் இடஒதுக்கீடுகள் பற்றிய விவரங்கள் வெளியிடப்படுவது இல்லை. பழங்குடி சமூகத்தைச் சார்ந்த ஒருவர் கூட பேராசிரியராக இல்லை. பல ஆண்டுகளுக்கு முன்பு நியமிக்கப்பட்ட ஒரே ஒரு இஸ்லாமியப் பேராசிரியர் மட்டுமே இருக்கிறார். மதச் சடங்குகளை அரசு நிறுவனங்களில் கொண்டாடக் கூடாது என்று வாஜ்பாய் பிரதமராக இருந்த காலத்தில் ஒன்றிய அரசே ஆணைகளைப் பிறப்பித்தது. தமிழ்நாடு அரசாணையும் இருக்கிறது. ஆனால், சரசுவதி, ஆயுதபூஜைகள் இந்தப் பல்கலைக் கழக நிதியிலிருந்தே கொண்டாடப்பட்டு வருகின்றன.




கலைஞர் ஆய்வு மய்யத்துக்கு ஒரு அறைகூட ஒதுக்கவில்லை. ஆனால் பஜனைப் பாடல்களைப் பாடுவதற்காக உருவாக்கப்பட்ட விவேகானந்தர் ஆய்வு மய்யத்துக்கு ஒரு மாடி முழுவதுமே இடமாக ஒதுக்கி இருக்கிறார்கள். பா.ஜ.க.வின் எச். ராஜாவும், வானதி சீனிவாசனும் வந்து போகும் புகலிடங்களாக இருக்கிறது இந்தப் பல்கலைக்கழகம்.

மக்களால் தேர்ந்தெடுக்கப்படும் ஆட்சியைவிட ஆளுநர்களின் உரிமைக்குரிய இடங்களாகவே பல்கலைக்கழகங்கள் செயல்படுவதையும் துணை வேந்தர்களை ஆளுநர்களே நியமிப்பதும் ஏற்றுக் கொள்ள முடியாது. இது குறித்து விவாதங்களை நடத்த வேண்டும். பெரியாரையும் கலைஞரையும் அவமதித்து ஆர்.எஸ்.எஸ். கூடாரமாகி வரும் பெரியார் பல்கலைக்கழகத்தின் முறைகேடுகளைத் தடுக்க தமிழ்நாடு அரசு முன் வரவேண்டும் என்று கழகத் தலைவர் செய்தியாளர்களிடம் விளக்கினார்.

கலைஞர் ஆய்வு மய்யத்துக்கு சேலம் மாவட்ட தி.மு.க. ஒரு கோடி ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்துள்ள நிலையில் ஏன் மதத்தின் அடிப்படையில் செயல்படுகிறது என்று செய்தியாளர் ஒருவர் கேட்டார். ‘ஆளுநர் மதவாதி களாக இருப்பதால் அவர்களால் நியமிக்கப்படும் துணைவேந்தர்கள் மதவாதிகளாகவே இருக்கின்றனர். துணைவேந்தர்களாகவே ஒரு குறிப்பிட்ட ஜாதியினர் தொடர்ந்து நியமிக்கப் படுகிறார்கள். எனவே அவர்கள் ஜாதியினரைக் கொண்டே பதவிகளை நிரப்புகிறார்கள். உறுதிப் படுத்தப்படாத தற்காலிக பதவிகளை உருவாக்கி தங்கள் ஜாதிக்காரர்களை நிரப்புகிறார்கள்” என்று கொளத்தூர் மணி பதிலளித்தார்.

பட்டியலின பழங்குடி மாணவர்களிடம் விதிகளை மீறி மாணவர்களுக்கு விடுதி உறைவிடக் கட்டணம் வசூலிக்கப்படுவதோடு விதிகளை மீறி பட்டியலின பிரிவு மாணவர்களிடம் தேர்வுக் கட்டணமும் வசூலிக்கப்படுகிறது. முனைவர் பட்ட மாணவர்களுக்கான இடங்களில் இடஒதுக்கீடும் பின்பற்றப்படுவது இல்லை என்று கண்டன ஆர்ப்பாட்டத்தில் விளக்கிப் பேசப்பட்டது.

ஆர்ப்பாட்டத்தில் கழகப் பொருளாளர் திருப்பூர் துரைசாமி, சேலம் கிழக்கு மாவட்டச் செயலாளர்- இரா.டேவிட், சேலம் மேற்கு மாவட்டச் செயலாளர் - சி.கோவிந்தராஜ், தமிழ்நாடு மாணவர் கழகம் சந்தோஷ், விடுதலை சிறுத்தைகள் கட்சி மண்டல அமைப்புச் செயலாளர் - இரா. நாவரசன், மதிமுக மாவட்ட இலக்கிய அணி செயலாளர்- அன்னையன்பன், சிபிஅய் மாவட்டக் குழு உறுப்பினர் ஆ.முனுசாமி, ஆதித் தமிழர் பேரவை சேலம் மாவட்டத் தலைவர்- சந்திரன், புரட்சிகர இளைஞர் முண்ணனி - வின்சென்ட், அம்பேத்கர் கல்வி இயக்கம் - கவி அரசன், அருந்ததியர் மக்கள் இயக்கம் - பிரதாபன், சிபிஎம் மாவட்டக்குழு உறுப்பினர்- ஆ.குணசேகரன், பகுஜன் சமாஜ் கட்சி சேலம் மாவட்ட செயலாளர் - பார்த்திபன், திராவிடர் இயக்கத் தமிழர் பேரவை - சுந்தரவதனம், தந்தை பெரியார் திராவிடர் கழகம் - தங்கராஜ், தமிழ் தேசிய மக்கள் முன்னணி - மாரியப்பன், திராவிட பண்பாட்டு நடுவம் - முல்லை வேந்தன் ஆகியோர் கவன ஈர்ப்பு உரையாற்றினர். சேலம் கிழக்கு மாவட்ட அமைப்பாளர் ஏற்காடு பெருமாள் நன்றி கூறினார்.

ஆர்ப்பாட்டத்தில், சேலம் கிழக்கு, மேற்கு, மேட்டூர், ஏற்காடு, தர்மபுரி, திருப்பூர், நாமக்கல் ஆகிய மாவட்ட கழகத் தோழர்கள் பொறுப்பாளர்கள் கலந்து கொண்டனர். ஆர்ப்பாட்டம் ‘திராவிடர் விடுதலைக் கழகம்’ முகநூல் பக்கத்தில் நேரலை செய்யப்பட்டது.

## கழகத்தின் “10 ஆம் ஆண்டு கருத்தரங்கம்”

*கழகம் தொடங்கிய ஆகஸ்ட் 12ஆம் தேதி – 10ஆம் ஆண்டு நிறைவு கருத்தரங்கம், 12.08.2021 வியாழன் அன்று மாலை 7 மணியளவில் இணைய வழியில் நடைபெற்றது. தென் சென்னை மாவட்டச் செயலாளர் உமாபதி வரவேற்று உரையாற்றினார். மேட்டூர் அருள்மொழி, மேட்டூர் கோவிந்தராஜன், பெரியார் பிஞ்சுகள் யாழினி யாழிசை, இசைமதி (கோவை) ஆகியோர் பகுத்தறிவுப் பாடல்களைப் பாடினர்.*

*“அனைத்து ஜாதியினரும் அர்ச்சகராகும் உரிமை” – சிவகாமி (தலைவர், தமிழ்நாடு அறிவியல் மன்றம்), “பிற்படுத்தப்பட்டோர் இடஒதுக்கீடு” – அன்பு தனசேகரன், பொதுச் செயலாளர் (OBC ஊழியர் நலச்சங்களின் தேசிய பேரமைப்பு), “நீட் தேர்வு இரத்தும் நடைமுறை சிக்கல்களும்” – மருத்துவர் எழிலன் நாகநாதன் (ஆயிரம் விளக்கு சட்டமன்ற உறுப்பினர்), “திராவிடர் விடுதலைக் கழகத்தின் எதிர்கால செயல்திட்டங்கள்” – கழக பொதுச் செயலாளர், விடுதலை இராசேந்திரன், ஆகியோர் கருத்துரை வழங்கினர். கழகத் தலைவர் கொளத்தூர் மணி நிறைவுரை வழங்கினார். இறுதியாக முகநூல் பொறுப்பாளர் பரிமளராசன் நன்றி கூறினார். தமிழ்நாடு மாணவர் கழகத் தோழர் சந்தோஷ் நிகழ்வை நெறியாள்கை செய்தார். திராவிடர் விடுதலைக் கழக இணையதளப் பிரிவு சார்பில் நிகழ்வு ஏற்பாடு செய்யப்பட்டது. நிகழ்வு முழுவதும், திராவிடர் விடுதலைக் கழகம் முகநூல் பக்கத்தில் நேரலை செய்யப்பட்டது.*

தலையங்கம்

## ஒன்றிய ஆட்சி திணிக்கும் இளங்கலைப் பாடத் திட்டம்

தமிழ்நாட்டுக்கான கல்விக் கொள்கையை தமிழ்நாடே உருவாக்கும் என்று தமிழக நிதிநிலை அறிக்கையில் இடம் பெற்றிருக்கும் வாசகம், வரலாற்றுப் பதிவு. தமிழ்நாட்டின் திசை வழிப் பயணத்தை வெளிச்சப்படுத்தும் ஒளி விளக்கு; இந்தப் பின்னணியில் தமிழ்நாட்டின் மீது இளங்கலைப் பட்டப்படிப்புக்காக ஒன்றிய ஆட்சி பல்கலைக்கழக மானியக் குழு வழியாக உருவாக்கியுள்ள பாடத் திட்டங்கள் வரலாற்றுத் திரிபுகளைக் கொண்டவையாகவும் தமிழ் நாட்டின் வரலாறுகளை இருட்டடிப்பு செய்வதாக இருப்பதையும் தமிழக அரசின் பார்வைக்குக் கொண்டு வர விரும்புகிறோம்.

பல்கலைக்கழக மானியக் குழு என்பதே ஒரு நிர்வாக அமைப்பு தான். பாடத் திட்டங்களை உருவாக்குவது இந்த அமைப்பின் பணி அல்ல; அது கல்வியாளர்களால் துறைவாரியாக தேர்வு செய்யப்பட்டக் குழுவினரால் உருவாக்கப்பட வேண்டும். மாறாக பல்கலைக் கழக மானியக் குழுவே சில ‘வைதிக சிந்தனை’யாளர்களைக் கொண்டு பாடத் திட்டங்களை உருவாக்கி மாநில அரசுகள் மீது திணிக்கிறது. தமிழ்நாட்டில் 1967 இல் தி.மு.க. ஆட்சிக்கு வந்த பிறகு தான் பாடத் திட்டங்களில் தமிழ்நாடு வரலாறே இணைக்கப்பட்டது. ஆந்திரா, கேரளா போன்ற மாநிலங்களும் அதற்குப் பிறகு தான் பாடத் திட்டங்களில் தங்கள் மாநில வரலாறுகளை இடம் பெறச் செய்தன. இதற்கும் வழிகாட்டியது ‘திராவிட’ ஆட்சி தான்.

இப்போது ஒன்றிய ஆட்சி, பல்கலைக்கழக மானியக் குழு வழியாக தயாரித்துள்ள இளங்கலை வரலாற்றுப் பாடத் திட்டத்தில் உருவாக்கப்பட்டுள்ள 14 பாடங்களில் மாநிலங்களின் வரலாறுகள் முற்றிலுமாகப் புறக்கணிக்கப் பட்டுள்ளன. பத்து பாடத் திட்டங்கள் இந்திய நாகரிகம், இந்து நாகரிகப் பெருமைகளையே பேசுகின்றன.

‘இந்தியா’ என்ற சொற்றொடரை ‘இந்துத்துவா’வும், ‘வேத புரியினரும்’ ஏற்பது இல்லை. மாறாக, ‘பாரத்’ என்பதையே அவர்கள் முன்மொழிகிறார்கள். இந்த பாடத் திட்டத்தின் முதன்மைப் பிரிவு ‘பாரத்’தையே முன்னிறுத்து கிறது. புராணம் – தொன்மம் – வைதிகம் சார்ந்தது ‘பாரத்’. மாறாக நதி – நிலம் சார்ந்தது இந்தியா. முஸ்லிம்களையும் கிறிஸ்தவர்களையும் உள்ளடக்கிய சொல் ‘இந்தியா’ என்பதால் அதை ஏற்கக் கூடாது என்றும், ‘பாரத்’ என்பதே நமக்கான அடையாளம் என்றும் ஆர்.எஸ்.எஸ்.சுக்கு தத்துவத்தை வழங்கிய கோல்வாக்கர் எழுத்துபூர்வமாக பதிவு செய்துள்ளார். ‘துவக்கக்கால வரலாறு’ பாடப் பிரிவில் இந்திய நாகரிக மரபு – வேதத்திலிருந்து தொடங்குகிறது. அதுவே இந்தியாவின் தொன்மை நாகரிகம் என்றும், அனைத்து மொழிகளிலும் முதன்மையானது ‘சமஸ்கிருதம்’ என்றும் பாடத் திட்டம் நிலைநாட்ட முற்படுகிறது.

ஜோதிராவ் புலே, சாகு மகாராஜா, நீதிக் கட்சி, பெரியார் குறித்த வரலாற்றுப் பதிவுகள் இருட்டடிக்கப்பட் டுள்ளதோடு, காந்தியார் வரலாற்றுக்கும் அழுத்தம் தராமல், ‘அவரது மதச்சார்பற்ற இந்தியா’வின் கருத்து இருட்டடிக்கப்பட்டிருக்கிறது. வ.உ.சி.யும் நேருவும் இடம் பெறாத இந்த வரலாற்றுப் பாடங்களில், இந்து மகாசபையின் தலைவர் மதன் மோகன் மாளவியா, விவசாயிகளின் தலைவராகப் போற்றிப் புகழப்படுகிறார். கடல் தாண்டிப் போவது ‘பிராமண தர்மத்துக்கு’ எதிரானது என்பதால், வட்டமேஜை மாநாட்டில் பங்கேற்க இலண்டன் சென்ற மாளவியா, அந்தப் ‘பாவத்துக்கு பரிகாரத் தேட’ இந்தியாவிலிருந்து மண்ணையும் கங்கை நீரையும் இலண்டனுக்கு எடுத்துப் போய் ‘தோஷம்’ கழித்தவர் .

மாநிலங்களின் வட்டார வரலாறுகளைத் திட்டமிட்டு இருட்டடிக்கும் இந்தப் பாடத் திட்டங்கள், டெல்லியின் வரலாற்றை மட்டும் மிக விரிவாகப் பதிவு செய்து, புராணங் களில் கூறப்படும் ‘இந்திரப் பிரஸ்தம்’ டெல்லியிலிருந்தே தொடங்குவதாக எழுதி, புராணங்களை வரலாறுகளாக திரித்துக் காட்டுகிறது. டெல்லியின் வரலாறு முகம்மது கோரியின் படை எடுப்பிலிருந்துதான் தொடங்குகிறது. சுல்தான் – மொகலாய ஆட்சிகளுடன் இணைந்தே நிற்கும் டெல்லி வரலாற்றை ‘புராணக் கதை’களுடன் இணைத்து திரிக்க முயல்வது வரலாற்றியல் குற்றம். பல்கலைக்கழக மானியக் குழு உருவாக்கிய இந்தப் பாடத் திட்டம் குறித்து விரிவாக ஆய்வு செய்து கருத்துகளை முன் வைத்துள்ளார் வரலாற்றுப் பேராசிரியரும் திராவிடர் இயக்கச் சிந்தனையாளருமான பேராசிரியர் கருணானந்தம்.

இந்த நிலையில் தமிழ்நாட்டுக்கான தனிக் கல்விக் கொள்கையை உருவாக்க விரும்பும் முதல்வர் மு.க. ஸ்டாலின், இந்தப் பாடத் திட்டங்களை தமிழ்நாடு அரசு ஏற்காது என்று அறிவிக்க முன்வர வேண்டும். சட்டமன்றத்தில் கல்வி மான்யக் கோரிக்கை வரும்போது, இது குறித்து விவாதமும் தமிழக முதல்வரின் அறிவிப்பும் வரும் என்றால், அது தமிழ்நாட்டு அரசுக்கு மேலும் பெருமை சேர்க்கும்.

பாடங்கள், பாடத் திட்டங்களை மாநிலங்களில் திணிக்கும் உரிமை ஒன்றிய ஆட்சிக்கு இல்லை. அதை மாநிலங்களே தீர்மானிக்கும் என்ற உரிமைக் குரலை நாம் எழுப்ப வேண்டும்.

தமிழ்நாடு தான் இதற்கும் வழிகாட்ட வேண்டும்.

# ஆகமத்துக்குள் பதுங்குவோரே, இதற்கு என்ன பதில்? [2]

***ஆகம விதிகளை மீறக் கூடாது என்று நீதிமன்றத்தில் வழக்குப் போடும் சிவாச்சாரியார்களே, இப்போது ஆகமவிதிகள் முறையாகத் தான் நடக்கிறதா?*** *(சென்ற இதழ் தொடர்ச்சி)*

- ஒவ்வொரு கோயிலும் இப்போது பின்பற்றப் படும் ஆகம முறையைத்தான் பின்பற்ற வேண்டும் என்று பார்ப்பனர்கள் கூறு கிறார்கள். அப்படியானால் ஒரு கேள்வி. ஒவ்வொரு கோயிலிலும் இப்போதுள்ள ஆகமமுறை எப்போது தொடங்கியது? அதற்கு ஏதேனும் ஆதாரம் இருக்கிறதா? பழனி முருகன் கோயிலிலும் கருமாரியம்மன் கோயிலிலும் பார்ப்பன அர்ச்சகர்கள் ஆகமத்துக்கு எதிராக உள்ளே புகுந்ததுபோல் வேறு கோயில்களிலும் மாற்றங்கள் நிகழ்ந் திருக்காதா? ஒரு அர்ச்சகர் கோயிலுக்கு வர முடியாத நிலையில் வேறு கோயில் அர்ச்சகர் அவருக்கு பதிலாக வந்து பூஜைகள் செய்கிறார்.
- இந்தக் கோயிலின் ஆகம வழிபாடு முறை அவருக்கு தெரியுமா? அந்த முறைப்படிதான் பூஜை நடத்து கிறார் என்பதற்கு ‘சோதனை’கள் உண்டா? எல்லாவற்றுக்கும் ‘அத்தாரிட்டி’ - அய்யர், அய்யங்கார், சர்மா, சாஸ்திரிகள்தானா? அவர்கள் கூறுவதுதான் வழிபாட்டு முறையா? இதுதான் ஆகமங் களைப் பின்பற்றும் ஒழுங்குமுறையா?
- ஆகமம் ‘சூத்திரர்’கள் (அதாவது - மனு சாஸ்திரப்படி “பிராமணர்”களின் வைப் பாட்டி மக்கள்) கோபுரத்துக்கு வெளியே நின்றுதான் தரிசிக்க முடியும் என்று கூறுகிறது. நடு மண்டபம் வரை ‘ஸ்மார்த்த பிராமணர்களும்’ மகாமண்டபம் வரை சத்திரியரும் வைசியரும் செல்லலாம். சிவாச்சாரிகள் மட்டுமே ‘கர்ப்பகிரகம் வரை’ செல்லலாம் என்று கூறுகிறது. (இது பிற்காலத்தில் பார்ப்பனர்கள் நுழைந்த இடைச்செருகல் என்பாரும் உண்டு. ஆனாலும் இப்போதும் இந்த இழிவு ஆகமத்தின் பெயரால் நீடிக்கிறது) சமூகத்தில் தீண்டாமை சட்டப்படி குற்றம் என்கிறது சட்டம். ஆனால், பார்ப்பன மதத்தின் ஆகமம் கூறும் ‘தீண்டாமை’ மட்டும் குற்றமில்லையாம்!
- அனைத்து ஜாதியினரும் கோயில்களுக் குள்ளேயே நுழையக் கூடாது என்பதுதான் ஆகமம் விதித்த கட்டளை. இதை மீறித்தான் 1947 ஆம் ஆண்டு அனைத்து ‘இந்து’க்களும் கோயிலுக்குள் நுழையவும் கோயில் குளத்தில் குளிக்கவும் உரிமை வழங்கப்பட்டது.
- **ஆகமத்துக்கு எதிராக பல மாற்றங்களை செய்தவர்தான் இராமானுஜர். திருவரங்கம் கோயிலில் ‘வைகாசன’ பூஜைகளை நிறுத்தி விட்டு ‘பஞ்சராத்திர பூஜை’ முறையை அறிமுகப்படுத்தியது இராமானுஜர்தான். திருவரங்கம் ‘ரெங்கநாதனிடம்’ அன்பைக் காட்டிய இஸ்லாமிய பெண், துலுக்க நாச்சியாரை திருவரங்கம் கோயிலுக்குள் அழைத்து வந்து வழிபாடு செய்யும் முறையைத் தொடங்கி வைத்தவர் இராமானுஜர் தான். (இந்த சடங்கு இப்போதும் தொடருகிறது) வைணவத் துறவியாக பார்ப்பனர்கள் கொண்டாடும் இராமானுஜரே ஆகமங்களை காலத்துக் கேற்ப மாற்றிக் காட்டியிருக்கிறார். ஆனால், அவர் வழிவந்ததாகக் கூறும் தென்கலையினர் ஆகமத்தை மாற்றாதே என்று நீதிமன்றத்துக்கு ஓடுகிறார்கள். பார்ப்பன இனவெறி மதத்தைத் தாண்டி நிற்கிறது.**
- ஒவ்வொரு நாளும் பூஜையின்போது கடவுள் சிலை முன் காட்டப்படும் 12 உபச்சாரங்களில் இறுதி உபச்சாரமான ‘நிருத்தியம்’ உபச்சாரத்தை ‘தேவதாசிகள்’தான் செய்ய வேண்டும் என்பது ஆகம முறை. தேவதாசி ஒழிப்புச் சட்டம் வந்த பிறகு இந்த முறையும் ஒழிந்தது. இப்படி ஆகமங்கள் மாற்ற மடைந்து வந்திருக்கும் வரலாறுகள் உண்டு.
- “நாங்கள் எங்கள் நலனுக்காக எப்படி வேண்டுமானாலும் மாற்றிக் கொள்வோம்; எதை வேண்டுமானாலும் செய்வோம்; நாங்கள் சொல்வதே ஆகமம்; நாங்கள் விதிப்பதே வழிபாட்டு முறை. அட, சூத்திரப் பசங்களா! உங்களை மட்டும் ஒதுக்கியே வைப்போம். எங்கள் குடுமியைக்கூட உங்களால் அசைக்க முடியாது” என்று பார்ப்பனர்கள் இந்தத் தீர்ப்பைக் கொண் டாடிக் கொண்டிருக்கிறார்கள்.

பார்ப்பனப் பிறவி இறுமாப்பு - ‘பழக்க வழக்கம்’ மதச் சுதந்திரம் என்ற அரசியல் சட்டப் பிரிவுகளாலும் இவை எல்லாவற்றையும்விட அதிகாரம் படைத்த ‘ஆகமங்களாலும்’ இன்று வரை ஆட்டிப் படைத்துக் கொண்டிருக்கிறது.

இது ‘பெரியாரின் நெஞ்சில் தைத்த முள்’ இந்த இழிவை ஒழிப்பதற்கே இறுதி மூச்சு அடங்கும் வரை பெரியாரின் போராட்டக் குரல் ஒலித்தது.

தி.மு.க. ஆட்சி அந்த முள்ளை அகற்றியிருக் கிறது!

தகவல்கள்: நீதியரசர் மகாராஜன் குழு பரிந்துரை

## வினா விடை

- ஒரு கல்லை செதுக்கி, ‘ஆவாஹானம்’ செய்து, வேத மந்திரம் ஓதிய பிறகு, அந்தக் கல் இறை சக்தி பெறுகிறது.

  **– விசுவ இந்து பரிஷத் வேதாந்தம்**

  சென்னையில் குடிசை மாற்று வாரிய வீடுகளில் கற்கள் இடிந்து விழுகிறதாம்; ஓடிப் போய் மந்திரம் ஓதுங்கள்; இறை சக்தி உண்டாக்கி உடைந்து விழாம காப்பாத்துங்க.
- ஹிந்து மதத்துக்கான ஆகம, வேத நடை முறைகள் 3000 ஆண்டுகள் பழமையானது.

  **– வேதாந்தம்**

  3000 ஆண்டுகளுக்கு முன்பு கோயில்களே இல்லையே! இல்லாத கோயிலுக்கு ஆகமத்தை உருவாக்கினேளா, ஜீ?
- அனைத்து ஜாதியினரையும் அர்ச்சகர் களாக்கும் அதிகாரத்தை உங்களுக்கு யார் கொடுத்தது? **– வேதாந்தம்**

  சாட்சாத் ‘சிவனும்’, ‘பெருமாளும்’தான் கொடுத்தார்கள். ‘பகவான்’களை சந்தேகிக்காதீர்; அது பெரும் பாவம்.
- சிவலிங்க திருமேனியை தொட்டு பூஜிக்க சிவாச்சாரியாருக்கு மட்டுமே உரிமை உண்டு.

  **– ஆகமப்பள்ளி நடத்தும் நடராஜ சுவாமி**

  சரி விடுங்க... இனி வெறும் கையில் தொடாமலேயே கை உறைப் போட்டு பூஜிக்கலாம்; பகவான் கோபிச்சுக்க மாட்டார்.
- ‘ஆகமம்’ பயின்று விட்டதால் மட்டுமே சிவாச்சாரியார் ஆக முடியாது.

  **– நடராஜன் சுவாமி**

  வேண்டாம்; நாங்கள் சிவாச்சாரியார் ஆக வேண்டாம்; ஒழுக்கமுள்ள மனிதர்களாகவே இருக்கிறோம்!
- அரசின் முடிவால் பல நூற்றுக்கணக்கான குடும்பங்கள் கண்ணீர் வடிக்கின்றன.

  **– நடராஜ சாமி**


  பகவான் கனவில் வந்து கண்ணீர் வடித்தார் என்று தானே, வழக்கமாக பேசுவீங்க...
- பெருமாள் கோயிலுக்குள் இல்லை; ‘ஆவாஹனம் செய்து எடுத்து வந்து விட்டோம் என்று எல்லோரிடமும் சொல்லுங்கள்.

  **– ஸ்ரீரங்கம் ரங்கராஜன் நரசிம்மன்**

  கோயிலில் பெருமாள் இல்லை இல்லவே இல்லை; இருக்குன்னு சொல்கிறவன் பெருமாள் விரோதி; அப்படி பரப்புகிறவன் அயோக்கியன்.
- சட்டசபைக்குள் பேசக் கூடாத சொற்கள் என்று மரபு இருப்பதுபோல் பூஜைகளுக்கும் மரபு இருக்கு. **– இரங்கராஜ் பாண்டே**

  ‘சூத்திரன்’ என்று சொன்னால் ஆத்திரம் கொண்டு அடின்னும் ஒரு மரபு இருக்கு, இரங்கராஜே!

## காசியிலும் பண்டரிபுரத்திலும்...!



ஒரே கடவுள் கோயிலுக்குள் இருந்தால் பாப்பானைத் தவிர யார் தொட்டாலும், கிட்டே போனாலும் தீட்டு ஆகிவிடும். அதே கடவுள் ஆலமரத்தடியிலோ, தெருவிலோ, திண்ணையிலோ இருந்தால் யார் வேண்டுமானாலும் தொடலாம். நாய்கூட நக்கிச் சுவைக்கலாம். கோயிலுக்குள் இருந்தாலும் எலி, கரப்பான், பூச்சி, பூனை உலாவலாம். மேலேறி விளையாடலாம்.

தமிழ்நாட்டு சிவனும், தமிழ்நாட்டு விஷ்ணுவும், உலகின் சிறந்த ஸ்தலங்களான காசியிலும் பண்டரி புரத்திலும் ஜகநாதத்திலும் இருந்தால் யாரும் தொட்டுக் கட்டித் தழுவிக் கும்பிடலாம்.

பஞ்சாபில் உள்ள ஆரிய சமாஜத்தார் வேதத்தை பஞ்சமர் உட்பட நாய், கழுதை, குதிரைகளுக் கெல்லாம் கேட்கும்படி வறட்டுக் கத்து கத்தலாம். ஆனால், தமிழ்நாட்டில் வேத சப்தம் நம் காதிலேயே விழக்கூடாது என்பார்கள்.

– விடுதலை 04.03.1967

## பிரிட்டிஷ் ஆட்சியிலிருந்து பா.ஜ.க. ஆட்சி வரை (6)

# ‘திராவிட நாடு’ கேட்டு காங்கிரசில் தீர்மானம் கொண்டு வந்தார் ராஜாஜி

*பிரிட்டிஷ் ஆட்சி அதிகாரத்தில் பங்கு போட்டுக் கொண்ட பார்ப்பனர்கள், சமுக சீர்திருத்தச் சட்டங்களைக் கொண்டு வந்த நிலையில், ‘தேச பக்தர்களாகி’, ‘சுதந்திரப்’ போராட்டம் நடத்திய காங்கிரசுக்குள் புகுந்து கொண்ட வரலாறுகளைப் பார்த்தோம். எதிர்பார்த்ததுபோலவே, ‘சுதந்திரம்’ - பார்ப்பன-பனியாக்களுக்கானதாகவே இருந்தது. இதைத் தான் பெரியார் எச்சரித்தார். சுதந்திர நாளை துக்க நாள் என்றார். இந்தப் பின்னணியில் அரசியலமைப்பு சபை எப்படி உருவானது என்ற வரலாற்றை சுருக்கமாகப் பார்ப்போம்.*

**விடுதலை இராசேந்திரன்**

முதலில் இந்திய அரசியலமைப்பை உருவாக்கிய அரசியல் நிர்ணய சபை, மக்கள் அனைவராலும் ஓட்டுப் போட்டு தேர்வு செய்யப்பட்ட அமைப்பு அல்ல. 1935ஆம் ஆண்டு பிரிட்டிஷார் உருவாக்கித் தந்த சட்டத்தின்படி படித்தவர்கள், சொத்துள்ளவர்களுக்கு மட்டுமே ஓட்டுரிமை. அந்த அடிப்படையில் மாகாண சபைக்கு தேர்வு செய்யப்பட்ட மாகாண சட்டசபைகள் அரசியல் அமைப்பை உருவாக்கும் சபைகளாக அறிவிக்கப்பட்டன. அதில் உறுப்பினர்களாக இருந்தவர்கள் 299 பேர் (பாகிஸ்தான் பிரிவினைக்குப் பிறகு). 11 முறை இந்த சபை கூடி, 3 ஆண்டுகள் விவாதித்து சட்டத்துக்கு இறுதி வடிவம் தந்தன. இதில் பெண் உறுப்பினர்கள் 15 பேர் மட்டுமே. சட்டத்துக்கு வடிவம் தருவதற்கு (Drafting Committee) 7 பேர் கொண்ட குழு அமைக்கப்பட்டது. டாக்டர் அம்பேத்கர் தலைவர். அல்லாடி கிருஷ்ண சாமி அய்யர், என். கோபால்சாமி அய்யங்கார், கே.எம். முன்ஷி, முகம்மது சாதுல்லா, பி.எல். மிட்டர், டிபி. கைத்தான். இதில் டாக்டர் அம்பேத்கர், முகம்மது சாதுல்லா இருவரைத் தவிர, அனைவருமே பார்ப்பனர்கள். செல்வாக்கும் அதிகாரமும் கொண்ட இந்த வரைவுக் குழு தயாரித்த சட்ட நகல்களே, அரசியல் நிர்ணய சபையில் பெருமளவில் விவாதிக்கப்பட்டன. வரைவுக் குழுவின் ஆலோசகராக இருந்தவர் பி.என். ராவ். இவர் உலகம் முழுதும் சுற்றுப்பயணம் செய்து பல நாடுகளின் அரசியல் சட்டங்களை ஆய்வு செய்தார்.

பார்ப்பனர்கள் ஆதிக்கம் நிறைந்த அரசியல் வரைவுக் குழுவில் அம்பேத்கர் தலைவராக இருந்தும் கூட அவரால், தான் எண்ணியவாறு முழு உரிமையுடன் செயல்பட முடியாத நிலையில் கைகள் கட்டப்பட்டிருந்தன. “நான் வாடகைக் குதிரையாகவே செயல்பட்டேன்” என்று அவரே பிறகு மனந்திறந்தார். இந்த சட்டத்தை எரிப்பதில் நானே முதல் மனிதராக இருப்பேன் என்று பின்பு மாநிலங்களவையிலேயே பேசினார். இந்த அரசியல் பின்புலத்தில் அரசியல் சட்டம் எப்படி உருவாக்கப்பட்டது என்ற சோகம் நிறைந்த வரலாற்றை சுருக்கமாகப் பார்ப்போம்:

1935ஆம் ஆண்டு பிரிட்டிஷார் உருவாக்கித் தந்த சட்டத்தின் பெரும் பகுதியை அப்படியே சுதந்திர இந்தியாவின் அரசியலமைப்பு ஏற்றுக் கொண்டது. 1935ஆம் ஆண்டு சட்டம் மாகாண உரிமைகளுக்கு எதிரானது என்று எதிர்த்துக் கொண்டிருந்த காங்கிரசார், அதே மாநிலங்களின் உரிமை பறிப்புகளுக்கு பச்சைக் கொடி காட்டினார்கள்.

காங்கிரஸ் தலைவர்களில் ஒருவரும், ‘சனாதன தர்மத்தில்’ ஆழ்ந்த நம்பிக்கையுள்ளவரும் அரசியல் நிர்ணயசபை உறுப்பினரும், 1948இல் நேரு அமைச்சரவையில் தொடர்வண்டித் துறை அமைச்சராக இருந்தவருமான கே. சந்தானம் (அய்யங்கார்) அரசியல் சட்டம் பற்றி இவ்வாறு கூறுகிறார்:

“பிரிட்டிஷ் அரசைக் கடுமையாக எதிர்த்து வந்த இந்திய தேசியத் தலைவர்கள் 1935இல் பிரிட்டிஷ் ஆட்சியை இந்தியாவில் நிலைநாட்டும் நோக்கத்துடன் உருவாக்கிய ஒரு அரசியல் சட்டத்தை அப்படியே **அடிமைத்தனத்துடன்** ஏற்றுக் கொண்டனர். (adopting almost slavishly) அதற்கான அசாதாரணமான சூழ்நிலையை அவ்வளவு சுலபமாக விளக்கிட முடியாது” என்கிறார். (Federal Financial Relations and other Essays). 1935ஆம் ஆண்டு சட்டத்தைத் தவிர, புதிய அரசியல் அமைப்பில் சேர்க்கப்பட்ட பகுதிகள் என்ன தெரியுமா? குடியரசு தலைவர் அதிகாரம், தேர்தல் நடத்தும் முறை, அடிப்படை உரிமைகள் பற்றிய சில பகுதிகள், அரசாங்கக் கொள்கைக்கான நோக்கங்கள், அரசியல் அமைப்புச் சட்டத்திருத்தங்கள் - இவை தொடர்பானவை மட்டுமே சட்டத்தில் புதிதாக சேர்க்கப்பட்டன.

இந்தியவில் கூட்டாட்சி அமைப்பை உருவாக்க வேண்டும் என்ற நோக்கத்துக்காகவே புதிய அரசியலமைப்பு ‘சுதந்திர’ இந்தியாவுக்காக உருவாக்கப்பட்டது. ஆனால் அத்தனையும் தலைகீழாக மாறிவிட்டது. இரண்டு உதாரணங்களை மட்டும் சுட்டிக் காட்டுகிறோம். 1935ஆம் ஆண்டு பிரிட்டிஷ் உருவாக்கித் தந்த சட்டத்தின் அடிப்படையில் இந்தியாவில் தேர்தல்கள் நடத்தப்பட்டன. அதுவரை தேர்தலைப் புறக்கணித்த காங்கிரஸ், தனது நிலையை மாற்றிக் கொண்டது. (நீதிக்கட்சி ஆட்சி தேர்தலில் பங்கேற்று, பார்ப்பனரல்லாத மக்களின் உரிமைகளுக்காக வகுப்புவாரி உரிமை, அறநிலையத் துறை சட்டம், பல்கலைக்கழகங்களை உருவாக்கும் சட்டம் மற்றும் சீர்திருத்த சட்டங்களைக் கொண்டு வந்ததைப் பொறுத்துக் கொள்ள முடியாத காங்கிரஸ் பார்ப்பனர்கள், தேர்தலில் போட்டியிட கட்சிக்குள் அழுத்தம் தந்தனர். சுயராஜ்ய கட்சி என்ற போர்வையில் களம் இறங்கினர்.)

அப்போது சென்னை மாகாணத்தில் காங்கிரஸ் கட்சி வெற்றி பெற்று இராஜகோபாலாச்சாரி (ராஜாஜி), சட்டப் பேரவை கட்சித் தலைவராக தேர்வு செய்யப்பட்டவுடன், “1937 - பிரிட்டிஷ் கவர்னரை நேரில் சந்தித்து ஆளுநர் தனது விருப்பம்போல் நிர்வாகத்தில் தலையிட மாட்டார் என்ற உறுதி மொழியைத் தர வேண்டும் என்றார். கவர்னரின் தலையீடு மாகாண சுயாட்சி உரிமையை மறுப்பதாகும். முழுமையான சுயாட்சி உரிமை இருந்தால் மட்டுமே பதவி ஏற்பேன் என்று நிபந்தனை விதித்தார். அதே நேரத்தில் காந்தியும், மாநில சுயாட்சியை உறுதி செய்ய வேண்டும். பதவிக் காலத்தில் அமைச்சர்கள் முடிவுகளில் ஆளுநர் குறுக்கிடக் கூடாது” என்று கோரிக்கை விடுத்தார் (1937, மார்ச் 30).

- *1940இல் ‘திராவிட நாடு’ கொள்கையை ஆதரித்து தீர்மானம் போட்டது நீதிக்கட்சி.*
- *நேரு - அரசியல் நிர்ணய சபையில் மாநிலங்களின் முழு சுயாட்சியை ஆதரித்துப் பேசினார்.*
- *1921ஆம் ஆண்டிலேயே ‘சென்னை மாகாணம்’ என்ற அடையாளத்தைக் கைவிட்டு, ‘தமிழ் மாகாண காங்கிரசாக’ப் பெயர் சூட்டிக் கொண்டது. அதன் முதல் தலைவராக இருந்த பெருமை பெரியாருக்கு உண்டு.*
- *பாகிஸ்தான் தனிநாடு கோரிக்கை எழுந்த நிலையில் காங்கிரஸ் தனது போக்கை தலைகீழாக மாற்றி மாநில சுயாட்சியைக் குழித் தோண்டி புதைத்தது.*

இந்த இடத்தில் ஒரு முக்கிய வரலாற்றுத் தகவலை பதிவு செய்ய வேண்டும். இராஜகோபாலாச்சாரி (ராஜாஜி) திராவிட நாடு தனியாகப் பிரிய வேண்டும் என்ற கோரிக்கையை வலியுறுத்தியவர்தான். அது முக்கிய செய்தி. இது குறித்து ‘மலர்க மாநில சுயாட்சி’ ஆய்வு நூலை எழுதிய கு.ச. ஆனந்தன் பின்வருமாறு எழுதியுள்ளார்:

“1942ஆம் ஆண்டு ஏப். 29இல் அலகாபாத்தில் நடைபெற்ற காங்கிரசு செயற்குழுவில், “வட இந்தியத் தலைவர்களால் சென்னை மாகாணம் தொடர்ந்து புறக்கணிக்கப்படுவதால் தனி பாகிஸ்தான் பிரிவினை கோரிக்கையைப் போன்று இந்திய துணைக் கண்டத்திலிருந்து தனி சென்னை மாகாணமும் பிரிவினை செய்யப்பட வேண்டும்” என்ற தீர்மானத்தை இராஜாஜி கொண்டு வந்தார். இதனைக் கடுமையாக எதிர்த்து மற்றொரு பார்ப்பன காங்கிரஸ் தலைவரான சத்திய மூர்த்தி, ‘பிரிவினை வாதத்தை எழுப்பும் நச்சு மனிதன் இராஜாஜியை காங்கிரசிலிருந்து நீக்க வேண்டும்’ என்ற தீர்மானத்தைக் கொண்டு வந்தார். அடுத்த நாள் இராஜாஜி காங்கிரஸ் செயற்குழுவிலிருந்து பதவி விலகினார். அதற்குப் பிறகு நடந்த அலகாபாத் காங்கிரஸ் மாநாட்டிலும் இராஜாஜி இதே தீர்மானத்தைக் கொண்டு வந்தார். கடுமையான கண்டனங்களுடன் அங்கிருந்து வெளியேற்றப்பட்டார்.

பின்னர் ஈரோட்டில் இருந்த பெரியாரிடம் நேரில் சென்று, நாட்டுப் பிரிவினைக்கு ஆதரவு தருவதாகக் கூறினார். அங்கு நடைபெற்ற பொதுக் கூட்டத்தில் பேசும்போது, “பெரியார் கேட்கும் திராவிடஸ்தானை பிரித்துக் கொடுத்து விட வேண்டும்” என்று இராஜாஜி பேசினார்.

1945ஆம் ஆண்டு மே 26இல் சென்னை கோகலே மண்டபத்தில் பேசிய ராஜாஜி தமிழ்நாடு விடுதலைக் கோரிக்கையை ஆதரித்துப் பேசினார். “தமிழர்கள் தமிழ்நாட்டை ஆள வேண்டும் என்று சொல்வதில் தவறில்லை. தமிழ்நாட்டில் கால்பங்கு பரப்புள்ள அயர்லாந்தை ஏமன்டிவேலரா என்ற தனிநாடாக ஆளும்போது தமிழ்நாடு ஏன் தனித்து இயங்காது? என்று கேட்டார்.

இப்படி திராவிட நாடு - தமிழ்நாடு பிரிவினையை ஆதரித்துப் பேசிய இராஜாஜி, நாடு சுதந்திரம் பெறப் போகும் கட்டத்தில் மீண்டும் காங்கிரசுக்குள் நுழைந்து மத்திய அமைச்சர் மேற்கு வங்க ஆளுநர் - கவர்னர் ஜெனரல் பதவிகளைப் பெறத் தயங்கவில்லை. இந்திய தேசியம் வழியாக பதவி, அதிகாரம் கிடைத்தால் தேசியவாதிகளாக மாறுவார்கள். அதிகாரங்களில் இல்லாதபோது நாட்டுப் பிரிவினையும் பேசுவார்கள். இதுவே பார்ப்பனர்கள் அணுகுமுறை.

பிரிட்டிஷ் ஆட்சி காலத்தில் மாநிலங்கள் உரிமைகளுக்கும் மொழிவாரி உரிமைகளுக்கும் அழுத்தமாகக் குரல் கொடுத்தது காங்கிரஸ். தென்னிந்திய நல உரிமைச் சங்கம் எனும் நீதிக் கட்சி திரவிட நாடு பிரிவினையை ஒலித்தது என்பது வரலாறு:

- 1946ஆம் ஆண்டு டிசம்பர் 13ஆம் தேதி, பிரதமர் நேரு அரசியல் நிர்ணய சபையில் மாநிலங்களின் முழு சுயாட்சியை வலியுறுத்தும் தீர்மானத்தையே முன்மொழிந்தார். எந்த மாநிலத்தின் மீதும் ஒன்றிய ஆட்சி முடிவுகளைத் திணிக்காது என்றும் தங்களுக்கான நிர்வாக அமைப்பை மாநிலமே தேர்ந்தெடுக்கலாம்; அது மன்னராட்சி என்ற முடிவாக இருந்தாலும்கூட ஒன்றிய ஆட்சி தலையிடாது என்றும் நேருவின் தீர்மானம் கூறியது.
- மொழி வழி மாநிலங்கள் பிரிக்கப்படாத காலத்திலேயே 1921ஆம் ஆண்டிலேயே காங்கிரஸ் கட்சியின் அமைப்புகள் மொழி வழி மாகாணங்கள் அடிப்படையில் மாற்றி அமைக்கப்பட்டன. ‘இராஜ்ய மாகாண காங்கிரஸ்’ என்ற பெயரில் செயல்பட்ட அமைப்பு, ‘தமிழ் மாகாண காங்கிரசாக’ மாற்றப்பட்டது. அதன் முதல் தலைவராக இருந்த பெருமை பெரியாருக்கு உண்டு.
- பிரிட்டிஷ் ஆட்சிக் காலத்தில் காங்கிரஸ் கட்சி இந்தியாவுக்கு அரசியல் சட்டத்தை உருவாக்குவதற்கு நியமித்த மோதிலால் கமிட்டியும் மாகாணங்களின் சுயாட்சியையே அழுத்தமாக பரிந்துரைத்தது.
- தென்னிந்திய நலஉரிமைச் சங்கமான நீதிக் கட்சி, 1940இல் திருவாரூரில் நடைபெற்ற இரண்டு நாள் மாநாட்டில் ‘திராவிட நாடு திராவிடருக்கே’ என்பதை தனது இலட்சியமாக அறிவித்தது.
- பார்ப்பன-பனியாவுக்கு அதிகார மாற்றம் தரும் ஒரு நாட்டில் தமிழர்கள் அடிமைத்தளையில் சிக்கி விடக் கூடாது என்பதில் உறுதி காட்டிய பெரியார், தனது திரவிட நாடு கோரிக்கைக்கு (சென்னை மாகாணத்தை தனித் தேசமாக்க வேண்டும்) ஆதரவு திரட்ட - 1940 ஜனவரியில் முஸ்லிம் லீக் தலைவர் ஜின்னாவை சந்திக்க பம்பாய் சென்றார். அப்போது பெரியாருக்கும் அவருடன் வந்த குழுவினருக்கும் அம்பேத்கர் வரவேற்று விருந்தளித்து பார்ப்பனியத்தை ஒழிப்பதில் பெரியாரோடு இணைந்து செயல்படுவதில் பெருமையடைவதாகவும் கூறினார். அம்பேத்கர் அந்தப் பேச்சை தமிழில் மொழி பெயர்த்தவர் பெரியாருடன் சென்ற அண்ணா.
- 1940ஆம் ஆண்டு திருவாரூர் மாநாட்டைத் தொடர்ந்து காஞ்சிபுரத்தில் திராவிட நாடு பிரிவினை மாநாடு நீதிக் கட்சி சார்பில் நடந்தது. பெரியார் ‘சென்னை மாகாணம்’ என்ற திராவிட நாட்டை தனி நாடாக்க வேண்டும் என்று பேசி

(4ஆம் பக்கம்)

DATE OF PUBLICATION - EVERY THURSDAY   TAMIL WEEKLY  REG.NO.TN/CC(S)DN/459/19-21  LICENCED TO POST WPP NO.TN/PMG(CCR)/WPP-462/2019-2021
PURATCHI PERIYAR MUZHAKKAM   REGISTERED WITH THE REGISTRAR OF NEWSPAPER FOR INDIA UNDER NO.TNTAM/2002/07776

# ‘நிமிர்வோம்’ வாசகர் வட்டம் நடத்திய ‘திராவிட இயக்க சினிமா’ கருத்தரங்கம்




நிமிர்வோம் - 19ஆவது வாசகர் வட்ட சந்திப்பு, ஆக.21, 2021 அன்று மாலை 6 மணியளவில், சென்னை திவிக தலைமை அலுவலகத்தில், திராவிட இயக்க சினிமா என்ற தலைப்பில் நடைபெற்றது. நிகழ்விற்கு ர.பிரகாசு தலைமை வகித்தார்.

‘அண்ணாவின் சினிமா’ எனும் தலைப்பில் தோழர் இரவிபாரதி) ‘கலைவாணரின் சினிமா’ எனும் தலைப்பில் கழகத் தோழர் எட்வின் பிரபாகரன் ஆகியோர் கருத்துரையாற்றினர். ஊடகவியலாளர் ஜீவசகாப்தன் - 80களுக்குப் பிறகு வந்த சினிமாக்களில் திராவிட இயக்கத் தாக்கம் குறித்துப் பேசினார்.

நிகழ்வின் இறுதியாக மயிலை மனோகர் நன்றி கூறினார்.

# 1939லேயே மதுரை மீனாட்சியை கோயிலை ‘ஆவாஹனம்’ செய்த வேத புரோகிதர்கள்

பார்ப்பனரல்லாத 24 பேர், உப அர்ச்சர்களாகிவிட்டார்கள் என்பதற்காகப் பார்ப்பன அர்ச்சகர்கள், ‘கோயிலுக்குள் உள்ள ‘பெருமாளை’ ஆவாஹனம் செய்து கோயிலிருந்து வெளியே எடுத்துக் கொண்டு வந்து விட்டோம்; கோயிலுக்குள் பெருமாள் இல்லை என்று ஒவ்வொருவரிடமும் போய்ச் சொல்லுங்கள்’ என்று பேசி வருகிறார்கள். இந்த ஆவாஹனம் 1939லேயே அவர்கள் செய்திருக்கிறார்கள் என்பதற்கு வரலாறு இருக்கிறது.

**மீனாட்சி ஆவாஹனம் செய்யப்பட்ட மங்கள நிவாசம் என்ன ஆனது?**

1939இல் மதுரைக் கோயிலில் ஆலயப் பிரவேசம் நடந்த பிறகு சனாதனிகளும் கோயில் அர்ச்சகர்களும் பெரும் கொந்தளிப்புடன் அதை எதிர்கொண்டார்கள். இப்போதைப் போலவே, அப்போதும் மீனாட்சி கோயிலைவிட்டு வெளியேறி விட்டதாக வர்ணாஸ்ரம ஸ்வராஜ்ய சங்கம் லா பாயிண்ட் நடேசய்யர் கூறினார்.

என்னென்ன பொய்ச் செய்திகளைப் பரப்புவது, வழக்குகளை எப்படித் தொடுப்பது, கோயிலில் பட்டியலினத்தவரும் நாடாரும் நுழைந்துவிட்ட நிலையில் அதை எப்படித் தடுப்பது என்பதெல்லாம் ஆலோசிக்க ஒரு இடம் தேவைப்பட்டது.

அந்த இடம் தானப்ப முதலி தெருவில் இருந்த மங்கள நிவாசம். அந்த பங்களாவில்தான் தினமும் கூடி சனாதனிகள் ஆலோசனை நடத்தினர். பிறகு ஒரு நாள், மீனாட்சியை அங்கே ஆவாஹனம் செய்துவிட்டனர். அதுதான் மீனாட்சி அம்மன் கோயில் என்று கூறி, வழிபாடுகளையும் நடத்தி வந்தனர்.

சில நாட்களுக்குப் பிறகுதான் ‘டபுள் ஆவாஹனம்’ நடத்தி மீனாட்சி தமிழ்ச் சங்கச் சாலையில் இருந்த ஓரிடத்திற்குக் கொண்டு செல்லப்பட்டார். ஆனால், எதுவும் நிலைக்கவில்லை. 1945இல் வழக்கில் தோற்ற பிறகு, அர்ச்சகர்கள் தங்கள் அதிகாரங்களை இழந்து கோயில் பணிக்குத் திரும்பினர்.

மங்கள நிவாசம் இப்பொதும் இருக்கிறது. அதில் இப்பொது ஒரு வயர் விற்கும் கடை இருக்கிறது.

(4ஆம் பக்கத் தொடர்ச்சி)

தீர்மானம் நிறைவேற்றச் செய்தார்.

- அப்போது பேசிய ‘திராவிட நாடு’ என்பது கேரளா, ஆந்திரா, கருநாடக மாநிலங்களை உள்ளடக்கியது அல்ல; பிரிட்டிஷார் உருவாக்கிய ‘சென்னை மாகாணம்’ என்ற முழு தமிழ் நாட்டையும் ஒரு சில ஆந்திர, கருநாடக மாவட்டங்களையும் உள்ளடக்கிய பகுதியைத்தான் என்பதை குறிப்பிட வேண்டும். மொழி வழி மாநிலப் பிரிவினைக்குப் பிறகு பெரியார் தமிழ்நாடு விடுதலை என்ற முழக்கத்தையே முன் வைத்தார்.

ஆக, அன்றைய ‘இந்திய அரசியல் சூழல்’ என்பது மாநில சுயாட்சி மற்றும் தனிநாடு கோரிக்கைகளை மய்யமாகக் கொண்டே சுழன்றன. ‘ஒரே இந்தியா’ என்ற எண்ண ஓட்டமே உருவாகவில்லை. அது இந்தியாவில் நினைத்துப் பார்க்கவே முடியாத கற்பனை என்ற எண்ண ஓட்டமும் அதற்கான அக-புறக் காரணிகளுமே மேலோங்கி நின்றன.

மாகாண சுயாட்சிக்கு இவ்வளவு அழுத்தம் தந்த காங்கிரஸ், சட்டம் உருவாக்கப்படும் காலத்தில் அதை முழுமையாகக் கை கழுவி விட்டது. காரணம், பாகிஸ்தான் பிரிவினைதான். மாநிலங்களுக்கு முழுமையான சுயாட்சி வழங்கப்பட்டால் இந்தியா தனித் தனி நாடாக சிதறிப் போய்விடும் என்ற தவறான கண்ணோட்டமே இதற்குக் காரணம். “மாநில சுயாட்சி பிரச்சினையில் பாகிஸ்தான் பிரிவினைக்குப் பிறகு கடிகாரத்தின் பெண்டுலம், ஒரு முனையி லிருந்து நேர் எதிராக வேறு முனைக்குச் சென்றது” என்கிறார் அரசியல் நிர்ணய சபைக்குழு உறுப்பினர் கே. சந்தானம் அய்யங்கார்.

(தொடரும்)

# வேலூர் மாவட்டக் கழகப் பொறுப்பாளர்கள் தேர்வு



22.8.2021 அன்று மாலை 6 மணியளவில் திராவிடர் விடுதலை கழகத்தின் வேலூர் மாவட்ட செயற்குழு கூட்டம் மாவட்ட செயலாளர் சிவா இல்லத்தில் நடைபெற்றது. அக்கூட்டத்தில் கீழ்க்கண்ட தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

1. இயக்கத்தின் வளர்ச்சி குறித்த செயல் திட்டங்கள் குறித்து விவாதிக்கப்பட்டது

2. வேலூர் மாவட்ட பொறுப்பாளர்களாக கீழ்கண்ட நபர்களை தோழர்கள் அனைவரும் ஒருமித்த கருத்தோடு தேர்வு செய்தனர்.

மாவட்ட பொருளாளர் சதீஷ், மாவட்ட ஊடகப் பொறுப்பாளர் விஜயகுமார், குடியாத்தம் நகர அமைப்பாளர் கோதண்டராமன் ஆகியோரை தேர்வு செய்தனர்.

சமூக வலைதளங்களில் இயக்கத்தின் நிகழ்வுகளையும் கருத்துக்களையும் பரவலாக கொண்டு சேர்ப்பது குறித்து விவாதிக்கப்பட்டது.

‘புரட்சி பெரியார் முழக்கம்’ புதிய சந்தாதாரர்களை சந்திப்பது குறித்தும் விவாதிக்கப்பட்டது.

# சுவரெழுத்து இயக்கம்: மதுரை மாவட்டக் கழகம் முடிவு

பெரியார் பிறந்தநாள் சுவரெழுத்து இயக்கம். 23.08.2021 அன்று மாலை 6 மணியளவில் மதுரை மாவட்ட கழகப் பொறுப்பாளர்களின் ஆலோசனை கூட்டம் நடைபெற்றது.

தந்தை பெரியாரின் 143ஆவது பிறந்த நாளையொட்டி மதுரை மாவட்டம் முழுவதும் சுவரெழுத்து இயக்கம் தொடங்குவது, 1000 சுவரொட்டிகள் மற்றும் 12 அடி நீள சுவரொட்டிகள் 100 தயார் செய்து மாநகர் முழுதும் ஒட்டுவது; மேலூர் கல்லம்பட்டியில் “பெரியார் பிறந்த நாள்” மாணவர்களுக்கான பேச்சு போட்டி கட்டுரை போட்டி நடத்துவது; புறநகரில் மேலூர், கல்லம்பட்டி, புலிப்பட்டி மாங்குளம் உள்ளிட்ட பகுதிகளில் பெரியார் பிறந்த நாளன்று பந்தல் அமைத்து மரியாதை செலுத்துவது; மாநகரில் நான்கு பகுதிகளில் மரியாதை செலுத்துவது; இறுதியில் பேரணியாக சென்று பெரியார் சிலைக்கு மாலையணிவிப்பது; மேலும் பழங்காநத்தம் பகுதியில் இந்துத்துவா வாதிகளால் சேதப்பட்டிருக்கும் பெரியார் சிலையை மீட்டெடுத்து மாவட்ட கழகம் சார்பில் புதிய சிலை நிறுவி பராமரிப்பது; பெரியார் முழக்கத்திற்கு 100 சந்தாக்கள் சேர்ப்பது ஆகிய முடிவுகள் மதுரை மாவட்ட கலந்துரையாடலில் எடுக்கப்பட்டது.

இதற்கான மொத்த செலவு 65,000 (அறுபத்தி ஐயாயிரம்). 100 சுவரொட்டிக்கான தொகை 15,000 ரூபாயை காமாட்சி பாண்டி பொறுப் பேற்று கொண்டார். சுவர் விளம்பரத் தின் பாதி தொகையான 20,000-த்தை மணிஅமுதன் ஏற்றுக் கொண்டார்.

“புரட்சிப் பெரியார் முழக்கம்”
ஆண்டுக்கட்டணம்
ரூ.200
தொடர்புக்கு: ஆசிரியர், 29, பத்திரிகை யாளர் குடியிருப்பு, திருவள்ளுவர் நகர், திருவான்மியூர், சென்னை-41.
✆ 7373684049

Tamil Weekly
Posted at : Pathrika Channel, Egmore RMS under WPP   Posted: 26th August 2021

OWNER AND PUBLISHER BY : K. RAJENDRAN, FROM 29, JOURNALISTS COLONY, THIRUVALLUVAR NAGAR, THIRUVANMIYUR, CHENNAI - 600 041.
AND PRINTED BY : S. THEESMAS, AT LILLY SOOSAI OFFSET, NEW NO.8, OLD NO.12/1, MOHAMMED USAIN LANE, ROYAPETTAH, CHENNAI - 600 014.
EDITOR ; K. RAJENDRAN